# AIM – (ANTI INTOXICANTS MOVEMENT)
# போதை எதிர்ப்பு இயக்கம்

நமது மீனவ கிராமங்கள் பொருளாதாரம் மற்றும் கல்வியில் வளர்ச்சி கண்டு நிற்கிறது அதேவேளை நம் இளைஞர்கள் மற்றும் பள்ளிமாணவர்கள் தற்போது கஞ்சா போன்ற கொடிய போதை பொருட்களை அதிகமாக பயன்படுத்தி வருகின்றனர் அத்தோடு அவைகளுக்கு அடிமைப்பட்டு பலர் கோமா நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் பலர் இதன் மூலம் உயிரிழந்தும் வருகின்றனர். எனவே இவைகளை தடுத்து இளைஞர்களை காத்திடும் நோக்கில் உருவாக்க பட்டதே போதை தடுப்பு இயக்கம்.

இளைஞர்களை போதை பொருட்களில் இருந்து மீட்டிடவும், வரும் தலைமுறையை இதர்க்கு அடிமையாக்க விடாமல் தடுத்திடவும் இளைஞர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோருக்கு போதிய விழிப்புணர்வை வழங்குவது, விற்பனையாளர்களை அடையாளம் கண்டு கஞ்சா போன்ற பொருட்களை நம் பகுதியில் வர விடாமல் தடை செய்வது, போதைக்கு அடிமையானவர்களை கண்டறிந்து அவர்களுக்கு உரிய மறு வாழ்வை அளிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வது போன்றவை இந்த அமைப்பின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

இவைகள் மூலம் நம் சமூகத்தை போதையற்ற சமுதாயமாக உருவாக்கிட பங்கு குருக்கள், காவல்துறை, மறுவாழ்வு மையங்கள் உதவியுடன் செயல்பாடுகள் நடைமுறை படுத்தபடும். இந்த இயக்கத்தின் மூலமாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் "போதை எதற்கு ?" என்ற குறும்படம் வெளியிட பட்டது . இணைய தளத்தின் மூலம் இது அனைவருக்கும் பகிரபட்டுள்ளது மேலும் இப்படத்தை ஒவ்வொரு ஊரிலும் உள்ள முக்கிய தெரு முனைகளில் திரையிட திட்டமிட பட்டுள்ளது. அதேபோன்று பரவி வரும் கஞ்சா குறித்தும் அவைகளில் இருந்து பாதுகாக்கவும் தேவாலயங்களில் பங்கு குருக்கள் மூலம் போதிய அறிவுரைகள் வழங்கபட்டுள்ளது . ராகுல் விஜோவின் அவர்களால் குடியரசு தினத்தில் நீரோடி முதல் கன்னியாகுமரி வரை விழிப்புணர்வு பைக் பயணம் நடத்தப்பட்டு, விழிப்புணர்வை ஏற்படுத்தும் துண்டு பிரசுரமும் வழங்க பட்டது . தொடர்ந்து உயர்நிலை பள்ளி மற்றும் மேல்நிலை பள்ளிகளிலும் கல்லூரியிலும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு வகுப்பு நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. காவலர், பாதிரியார், வழக்கறிஞர், ஆசிரியர் போன்ற பல்வேறுதரப்பட்டோர் இதில் உறுப்பினர்களாக உள்ளனர்.

- தலைவர்: சாகர்
- உப தலைவர்: திருமதி .ஜெறி
- செயலாளர்: பேபி ஜாண்
- துணை செயலாளர்: ரவி மெல்கியாஸ்
- பொருளாளர்: ஜிஜோ